02.04.2026

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

<u>அசல் வழக்கு எண்</u>**.56/2014**

**2026**–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02–ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய வா.சா.**1–**வது நபரின் வாக்குமூலம் **1969**–ம் ஆண்டு 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி <u>திருமதி</u>**.K**<u>.காயத்ரி</u> என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வகுமார் | த/பெ. | முத்துகிருஷ்ணன் |
| கிராமம் | மருவத்தூர் | தாலுக்கா | துறையூர் |
| தொழில் | விவசாயம் | சமூகம் | |
| வயது | 36 | நாள் | **02 .04.2026** |

**IA No**.6/2026 **dated** 25.03.2026 <u>உத்தரவின்படி சாட்சி அனுமதிக்கப்படுகிறார்</u>**.**

<u>கூடுதல் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 5 வது வாதியாவேன். இதற்கு முன் வா.சா.1 ஆக 25.08.2025 அன்று சாட்சியமளித்துள்ளேன். இன்று எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வந்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 05.07.2024 ம் தேதியிட்ட வாதி 1, 3 பிரதிவாதிக்கும், மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி ஆகியோருக்கு அனுப்பிய மனு வ.சா.ஆ.10 (4

02.04.2026

தாள்கள் அஞ்சலக ரசீதியுடன்)

2. 24.02.2025 – 3 ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய விசாரணை அறிவிப்பு அசல் வ.சா.ஆ.11

தாவாப்படி தீப்பாக வேண்டுகிறேன்.

1 முதல் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என அரசு வழக்கறிஞர்தெரிவித்தார்.

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தில் எனக்குள்ள உரிமையை விளம்புகை செய்ய கோரி தான் இவ்வழக்கை 2014 ம் ஆண்டு தாக்கல் செய்தேன். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் வ.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள மனுக்களை நான் அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். வழக்கை தாக்கல் செய்த பிறகு 10 ஆண்டுகள் கழித்து தான் வ.சா.ஆ.10 ஆவணம் சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்தே 2009 ம் ஆண்டு முதல் நான் மனு அளித்து வருகிறேன். அவ்வாறு 2009 ம் ஆண்டு முதல் மனு அளித்து வருவதற்கான அத்தாட்சியை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வ.சா.ஆ.10 ஆவணத்தில் 6,7 பிரதிவாதிகள் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வ.சா.ஆ.11 ஆவணப்படி 20.03.2025 அன்று 3 ம் பிரதிவாதி

02.04.2026

முன்னிலையில் விசாரணைக்கு ஆஜரானேன். ஆனால் எதிர் தரப்பில் தான் ஆஜரானேன். வ.சா.ஆ.11 ஆவணத்தில் 6, 7 பிரதிவாதிகள் பெயர் குறிப்பிட்டு ஆஜராகுமாறு அறிவுறுத்தி குறிப்புகள் ஏதும் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வ.சா.ஆ.11 ஆவணத்திற்கு கட்டுப்பட்ட நடவடிக்கையில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றால் நடவடிக்கைகள் நிலுவையில் தான் உள்ளது. வ.சா.ஆ.10 ஆவணத்தில் வழக்கு எண். 56/2014 பற்றி குறிப்பிடவில்லைஎன்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்களுக்கு தெரியும். வருவாய் துறையில் வழக்கு 56/2014 நிலுவையில் இருப்பது தெரியும் என கடிதம் எதுவும் அனுப்பியுள்ளார்காள என்றால் இல்லை. வ.சா.ஆ.10, 11 இரு ஆவணங்களும் வழக்கிற்கு பின்னிட்டு வழக்கில் காலதாமதத்தை ஏற்படுத்த வேண்டி கெட்டஎண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக உரிமை மூலங்களை பொருத்து முடிவு செய்ய தான் மனு கொடுத்துள்ள அதிகாரிகளுக்கு ஆள்வரையறை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வ.சா.ஆ.10, 11 ஆவணங்கள் சரியில்லை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/−திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.